## மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப தர தொழிற்கலை சேவைப் பிரிவின் மின் மருத்துவ எந்திரவியலாளர் பதவித் தரம் III இற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல் - திறந்த முறை

மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப தர தொழிற்கலை சேவைப் பிரிவின் மின் மருத்துவ எந்திரவியலாளர் பதவித் தரம் III இல் காணப்படும் 01 வெற்றிடத்தை நிரப்புவதற்காகத் தகுதியுடைய அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி 202610.02 ஆகும்.

02. மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2014.09.30 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப தொழிற்கலை சேவை PL -3-2006 A பிரிவின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுத் திட்டத்தின் 7.2 ஆம் பிரிவின் விதந்துகாப்புகளுக்கு அமைவாக 2026.01.27 ஆம் திகதியன்று பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

03. **இப்பதவியானது நிரந்தரமானது மற்றும் ஓய்வூதிய உரிமையுடையது**. **பதவிக்குரிய சம்பளத் திட்டம்** : **ரூ**. 42780 – 10 X 490 -10 X 540 -10 X 590 – 12 X 630 – 66540

(i) கல்வித் தகுதிகள் : கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது NVQ-3 தகைமையைப் பெற்றிருத்தல்.

(ii) தொழில்சார் தகுதிகள் : பதவிக்கு அமைவாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப / தொழில்சார் பயிற்சிக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமைச் சான்றிதழ் 4 ஆம் மட்டத்திற்கு (NVQ 4) குறையாத மட்டத்திலான தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) அனுபவம் : பொருந்தாது.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

(iv) உடற்தகுதி : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்திற்குள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் மனவியல் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(v) ஏனையவை :

i. இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரிகள் நற்பண்பு உடையவராக இருத்தல் வேண்டும்.
iii. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காகத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனக் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் / வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் திகதிக்கு அத்தகுதிகள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
iv. இப்பதவிக்கு ஆண் விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

(vi) வயது :

குறைந்தபட்ச எல்லை : 18 வயதிற்கு குறையாதிருத்தல் வேண்டும்.
உயர் எல்லை : 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (அரச சேவையில் நிரந்தரப் பதவியை வகிப்போருக்கு உயர் வயது எல்லை பொருந்தாது).

(vii) ஆட்சேர்க்கும் முறை : எழுத்துப் பரீட்சை மற்றும் செய்முறை தொழில்சார் பரீட்சை என்பவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். முதலாவதாக எழுத்துப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளிலிருந்து அவர்கள் பெறும் புள்ளிகளின் திறமை வரிசைப்படி ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையைப் போல் இருமடங்கானோர் செய்முறை தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். செய்முறை தொழில்சார் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் மற்றும் செய்முறை தொழில்சார் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் என்பவற்றின் கூட்டுத்தொகையின் திறமை வரிசைப்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**(i). எழுத்துப் பரீட்சை**

| **பாடங்கள்** | **பாடவிதானம்** | **காலம்** | **அதிகபட்சப்** | **சித்திப்** |
|---|---|---|---|---|

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

| | | | **புள்ளிகள்** | **புள்ளிப் அளவு** |
|---|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | சொற்கள், எண்கள் மற்றும் உருவங்களாக முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் விண்ணப்பதாரிகள் வெளிப்படுத்தும் முடிவுகள் மற்றும் துலங்கல்களின் அடிப்படையில் அப்பிரச்சினைகள் பற்றிய புரிதல், அளவீடு மற்றும் காலம், வெளி என்பவற்றுக்கிடையிலான தொடர்பைப் புரிந்து கொள்வதில் விண்ணப்பதாரியொருவருக்கு உள்ள ஆற்றலை அளவிட்டுப் பார்ப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| பாடவிதானம் சார்ந்த பொது அறிவு | பதவிக்குரிய கடமைகள் பற்றிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வினாத்தாள் தயாரிக்கப்படும். | 01 1/2 மணித்தியாலம் | 100 | 40% |

**(ii). தொழில்சார் பரீட்சை**

Gazette.lk

| பாடங்கள் | பாடவிதானம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| துறை சார்ந்த அடிப்படை அறிவு, உபகரணங்களைப் பொறுத்துதல், திருத்துதல் பற்றிய அறிவு, உரிய துறையிலான உபகரணங்களின் பழுதுகளைக் கண்டறிதல், துறை சார்ந்த உபகரணப் பயன்பாடு பற்றிய அறிவு | 1:16 அளவீட்டை வாசித்தல், மின் வயரிங் செய்தல், சாதாரண மின் உபகரணங்களை திருத்துதல், எளிய ஈயப் பற்றவைப்பு செய்தல், பொறுத்துதல் (Fit) செய்தல் | 30 நிமிடங்கள் | 100 | 40% |

(iii). விண்ணப்பங்கள் கோரும் முறை - விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் மாதிரிக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 2026.10.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், த.பெ. எண் 121, மத்திய மாகாண சுகாதார அமைச்சு, சங்கராஜ மாவத்தை, கண்டி எனும் முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் மேல் இடது மூலையில் "மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப தர தொழிற்கலை சேவைப் பிரிவின் மின் மருத்துவ எந்திரவியலாளர் பதவித் தரம் III இற்காகத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல் - திறந்த முறை" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

திகதி 2026.09.11

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

ஜெகத்அதிகாரி
செயலாளர்
சுகாதார, சுதேசியவைத்தி, சமூகநலன்புரி,
நன்னடத்தைமற்றும்சிறுவர்பராமரிப்புச்சேவைகள்அமைச்சு
மத்தியமாகாணம்

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED